**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

**2024–ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண்.51/2023**

**in**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.86/2022**

**(CNR No.TNG19–004479–2022)**

**----**

சுப்பிரமணியக்கவுண்டர் ..... மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. ஆறுமுகக்கவுண்டர்

2. உதவி மின்பொறியாளர்,

தமிழ்நாடு மின்சார வாரியம்,

அம்பிளிக்கை மின்பகிர்மானம்,

ஒட்டன்சத்திரம்.

...... எதிர்மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள்

இந்த மனுவானது இந்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண். 86/2022–இல் இ.ம.எண்.51/2023 ஆக 13.07.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சௌந்திரபாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** தாவா கிணறு 1ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ச.எண்.141/2A–இன் வடகிழக்கு மூலையில் உள்ளதா அல்லது ச.எண்.141/2–இன் வடமேற்கு மூலையில்

உள்ளதா என்பதை கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அளவையர் உதவியுடன் தாவா சொத்தினை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய மூத்த வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிட கோரி இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**

மனுதாரர், அசல் மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர்/1 ஆம் பிரதிவாதி என்றும், 1–ம் எதிர்மனுதார்/1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியால் தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் பிற பரிகாரங்களுக்காகவும் அசல் வழக்கினை தாக்கல் செய்து முழு விசாரணைக்குப் பின்னர் அசல் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றும், விசாரணை நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து மனுதாரர் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாச் சொத்துக்கள் தனக்கும், 1 ஆம் எதிர்மனுதார்/ 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதிக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், உபயவாதிகளின் தகப்பனாரின் இறப்பிற்கு பிறகு மேல்முறையீட்டாளர், 1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் ஆகிய இருவரும் சொத்துக்களை சரி பாதியாக பாகம் பிரித்து கொண்டதில், ச.எண்.141/2–க்கு கட்டுப்பட்ட ஏக்.1.23 நிலத்தில் குறிப்பிட்ட நான்குமாலுக்குள் வடபுறம் 50 செண்ட் நிலம் மனுதாரருக்கும், தென்புறம் மீதமுள்ள 73 செண்ட் நிலம் 1–ம் எதிர்மனுதார்/1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்றும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நிலம் ச.எண். 141/2A என்றும், 1–ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட நிலம் ச.எண்.141/2B என்றும் நிலஉடமை மேம்பாட்டுத் திட்ட காலத்தில் உட்பிரிவு ஏற்பட்டும் அனுபித்து வந்ததில் மனுதாரர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் குறிப்பிட்ட ச.எண். 141/2–க்கு கிழக்குப்பகுதியில் மத்தியில் இருந்த பொதுக்கிணறு வாதியின் பாகத்தில் இருந்ததாகவும், மேற்படி கிணறு வெகு காலத்திற்கு முன்பே தூர்ந்து போய் விட்டதால் அதனை 1–ம் எதிர்மனுதார் மூடிவிட்டதாகவும், பொதுவாக

கிணறு வெட்ட முன்வராததால் மனுதாரர் அவருக்கு தனித்துப் பாத்தியப்பட்ட ச.எண்.141/2A–ன் வடகிழக்கு மூலையில் புதிதாக கிணறு ஒன்றினை வெட்டி முறைப்படி மின்இணைப்பு பெற்று அனுபவித்து வருவதாகவும், 1–ம் எதிர்மனுதார்/ 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதியின் பிராதின் சொத்து விபரத்திலேயே ச.எண்.141/2–ல் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள துரஸ்து கிணர் ஒன்றும், அதன் பாத்தியங்களில் சரிபகுதி பாத்தியம் என்று தான் குறிப்பிட்டு, விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளார் என்றும், தாவாச் சொத்தில் வடமேற்கு மூலையில் தற்போது கிணறே இல்லை என்றும், தாவா சொத்தின் வடமேற்கு மூலையில் தற்போது கிணறே இல்லை என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் தனது சாட்சியத்தில் சர்வே எண்.141/2A–ன் வடகிழக்கு மூலையில் உள்ள மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தனிப்பட்ட முறையில் வெட்டிய கிணற்றை பொதுக்கிணறு என்றும், ச.எண்.141/2–ன் வடகிழக்கு மூலையில் கிணறு இருப்பதாகவும், பின்னர் தனது பிராதில் வடமேற்கு மூலையில் கிணறு இருப்பதாகவும் முன்னுக்குப்பின் முரணாக, உண்மைகளை மறைத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும், தாவாக் கிணறு 1–ம் எதிர்மனுதார்/ 1–ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதி அவரது பிராதில் குறிப்பிட்டுள்ளபடி வடமேற்கு மூலையில் உள்ளதா, அல்லது மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வாதஉரையில் கூறியபடி வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதை அறிய நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் தாவா கிணறு சம்பந்தமான பிரச்சனைக்கு சரியான தீர்விற்கு வர இயலும் என்றும், விசாரணை நீதிமன்றம் மனுதாரர் நிலத்தில் வடகிழக்கு மூலையில் உள்ள சொந்த கிணற்றை தாவா கிணறு என விளம்புகை பரிகாரம் வழங்கியுள்ளதாகவும், தாவா கிணறு வடமேற்கு மூலையில் உள்ளதா, அல்லது வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதை அறிந்து வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காண இயலும் என்றும், எனவே தாவா கிணறு சர்வே எண்.141/2–இன் வடமேற்கு மூலையில் உள்ளதா அல்லது வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதையும் அதன் அமைப்பு, இயற்பியல் தன்மைகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:</u>**

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், மனுதார் நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியங்களை கேகரிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரின் கூற்றுக்கள் உண்மையாக இருந்திருந்தால் விசாரணை நீதிமன்றத்திலேயே நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், மனுதாரர், நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி விசாரணை நீதிமன்றத்தில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மேல்முறையீட்டை காலம் கடத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்/மேல்முறையீட்டாளர், அவருடைய மனுவில் ஒரு கிணறு மட்டுமே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாலும், ஏதோ பழைய கிணறு வடமேற்கு மூலையில் இருப்பதாகவும், மனுதாரரின் கிணறு வடகிழக்கு மூலையில் உள்ளதாகவும், குறிப்பிட்டு அவைகளை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனுத்தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் தற்போது இருப்பதே ஒரு கிணர்தான் என்றும், இல்லாத கிணற்றை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அசல் மேல்முறையீட்டை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற தீய எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்திகளை பொறுத்து ஆவணங்களின் மூலம் நிரூபணம் செய்ய வேண்டுமென்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் 1–ம் எதிர்மனுதார் தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து முழு விசாரணைக்குப் பின்னர் அசல் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளதாகவும், தாவாச் சொத்துக்கள் மனுதாரருக்கும், 1 ஆம் எதிர்மனுதாருக்கும் பாத்தியப்பட்ட பூர்வீக பொதுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், மனுதாரர் மற்றும் 1 ஆம் எதிர்மனுதாரரின் தகப்பனார் இறந்தபின்பு பாகப்பிரிவினை செய்துகொண்டதாகவும், சர்வே எண்.141/2–க்கு கட்டுப்பட்ட ஏக்.1.23 நிலத்தில் 0.50 செண்ட் நிலம் குறிப்பிட்ட நான்குமாலுக்குள் மனுதாரருக்கும், மீதம் உள்ள நிலம் 73 செண்ட் நிலம் 1–ம் எதிர்மனுதாரருக்கு தென்புறமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட வடபுறம் உள்ள 0.50 சென்ட் பூமி 141/2A என்றும், தென்புறமுள்ள பூமி சர்வே எண்.141/2B என உட்பிரிவுகள் செய்யப்பட்டது என்றும், பாகப்பிரிவினையில் குறிப்பிட்டுள்ள கிணறு, 1 ஆம் எதிர்மனுதாரர்/வாதி நிலத்தில் இருந்ததாகவும், மேற்படி கிணறு வெகுகாலத்திற்கு முன்பே தூர்ந்துபோய்விட்டது என்றும், சர்வே எண்.141/2A–இல் உள்ள கிணறு மனுதாரர் அவரது சொந்த செலவில் வெட்டி மின்இணைப்பு பெற்று நீர்பாசனம் செய்து வருவதாகவும், தாவா பிராதில் சொல்லியுள்ள கிணறு சர்வே எண்.141/2–இல் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள கிணறு சரிபாதி பாத்தியம் என்று விளம்புகை பரிகாரம் தாக்கல் செய்துள்ளார், தாவா பிராதில் சொல்லியுள்ள கிணற தற்போது இல்லை என்றும், சர்வே எண்.141/2A வடகிழக்கு மூலையில் உள்ள கிணறு மனுதாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட கிணறு என்றும், சர்வே எண்.141/2–இன் வடகிழக்கு மூலையில் கிணறு இருப்பதாகவும் முன்னுக்குப்பின் முரணாக உண்மைகளை மறைத்து வா.சா.1 சாட்சியமளித்துள்ளதாகவும், தாவா கிணறு 1 ஆம் எதிர்மனுதாரர்/1 ஆம் எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி அவரது பிராதில் கோரியபடி வடகிழக்குமூலையில் உள்ளதா அல்லது வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதை நிரூபிக்க மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்க வேண்டியுள்ளதாகவும்,

எனவே தாவா கிணறு வடமேற்கு மூலையில் உள்ளதா அல்லது வடகிழக்கு மூலையில் உள்ளதா, தாவா கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது, அதன் அமைப்பு இயற்பியல்புகள் தன்மைகள் ஆகியவற்றை இந்த மேல்முறையீட்டில் உள்ள பிரச்சனைக்கு சரியான தீர்விற்கு வர இயலும் என்றும், எனவே தாவா கிணறு சர்வே எண்.141/2–இன் வடமேற்கு மூலையில் உள்ளதா அல்லது வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**7.** 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதார் நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியங்களை கேகரிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்யாமல் மேல்முறையீட்டு வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்த மனு தாக்கல் செய்துள்ளது அசல் மேல்முறையீட்டு வழக்கை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் குறித்து விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை தெளிவாக விவாதித்து அதற்கு தீர்வு கண்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஆவண சாட்சியங்களின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், இந்த மேல்முறையீட்டை முடிவு காண்பதற்கு ஆணையர் அறிக்கை எந்தவிதத்திலும் உறுதுணையாக இருக்காது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கூறியுள்ளார்.

**8.** இந்நிலையில் இவ்வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில் 1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து முழுவிசாரணைக்கு பின்பு அசல்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அசல்வழக்கில் மனக்குறைவுற்ற பிரதிவாதி

இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் 1ஆம் எதிர்மனுதாரர் தாவா கிணறு சர்வே எண்.141/2–இன் வடமேற்கு மூலையில் உள்ள கிணறு அவருக்கு பாத்தியம் என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா கிணறு சர்வே எண்.141/2 இல்லை என்றும், சர்வே எண்.141/2A–இல் உள்ள கிணறு மனுதாரருக்கு தனித்து பாத்தியப்பட்ட கிணறு என்றும், தாவா கிணறு சர்வே எண்.141/2–இன் வடமேற்கு மூலையில் உள்ளதா அல்லது சர்வே எண்.141/2A–இன் வடகிழக்கு மூலையில் உள்ளதா என்பதை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவிட வேண்டி மனுத்தாக்கல் செய்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியங்களை சேகரிப்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யாமல் அசல்மேல்முறையீட்டை இழுத்தடித்து காலம் கடத்துவதற்காகவே தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் குறித்து முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களை தெளிவாக விவாதித்து விசாரணை நீதிமன்றம் அசல்வழக்கில் சரியான தீர்வு கண்டுள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று கூறியுள்ளார். இருப்பினும், சர்வே எண்.141/2–இல் கட்டுப்பட்ட ஏக்கர் 1.23 சென்ட் நிலம் 0.50 சென்ட் வடபுறம் மனுதாரருக்கும், தென்புறம் 0.73 சென்ட் நிலம் 1ஆம் எதிர்மனுதாரருக்கும் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டு அவரவர் அனுபவித்து வரப்படுவதாகவும், வடபுறம் 0.50 சென்ட் நிலம் சர்வே எண்.141/2A என்றும், தென்புறம் உள்ள 73 சென்ட் நிலம் 141/2B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 141/2–க்கு கிழக்குப்பகுதியில் மத்தியில் பொதுக்கிணறு வாதியால் வெட்டப்பட்ட தனிப்பட்ட கிணறு என்றும் குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்திற்கொண்டும், தாவா சொத்து விபரத்தில் சர்வே எண்.141/2–இன் வடமேற்கு மூலையில் கிணறு இருப்பதாக சொல்லியுள்ள கிணறு இல்லை என்பதையும், சர்வே எண்.141/2A–இல் உள்ள கிணறு வடகிழக்குமூலையில் உள்ளது என்பதையும், நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்யப்படும் அறிக்கை மற்றும் வரைபடத்தின் உதவியுடன் மேல்முறையீட்டு வழக்கு

பிரச்சனையில் இறுதியான தீர்விற்கு வர இயலும் என்று குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்திற்கொண்டும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை அனுமதித்து உத்தரவிடுவது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**9.** இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் செல்வி.சுபாஷினி அவர்கள் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையருக்கு கட்டணமாக ரூ.7,500/−யை மனுதாரர் தரப்பில் செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் அறிவிப்பு அனுப்பி, மனுவில் சொல்லப்பட்டுள்ள மனுச்சொத்துக்களை நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் நிலஅளவை மேற்கொண்டு வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா நாள் 27.02.2024.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2024−ஆம் வருடம் ஜனவரி மாதம் 29 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2024.01.29 17:26:05 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

**10. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் −இல்லை**

M DHANABAL Digitally signed by M DHANABAL Date: 2024.01.29 17:26:10 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.51/2023 in
A.S.No.86/2022
Sub Court, Oddanchatram.
29.01.2024
Order (Fair/Draft)